1970 மார்ச் 24]

தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கென்ற அரசாங்க உத்தரவு ஜி. ஓ. 3030-ம் எண் 2—12—1969-ம் தேதியுள்ளதில் இந்தக் கட்டண விகிதங்கள் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. காலதேசவர்த்தமானத்தின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன ஆலோசனைகளைப் பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

கோடவாசல் திரு. சி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, அஞ்சல் பைகள் தனியார் பஸ்களில் வருவதை மாற்றி, அரசாங்க பஸ்களில்தான் வரவேண்டும் என்று செய்வார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அது அஞ்சலகத்தைத் தொடர்பு கொண்டு செய்ய வேண்டிய வேலையாகும்.

விருதுநகரில் அரசு போக்குவரத்து பணிமனை.

*526 வினா.—**திரு. பெ. சினிவாசன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகரில் அரசாங்க பேருந்துகளை பழுது பார்க்க புதிய பணிமனை கட்டும் உத்தேசம் உண்டா ?

(இ) அதற்குரிய நிலம் வாங்க ஏற்பாடு செய்யப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) ஆம்.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : இப்படிப்பட்ட பணிமனைகள் வேறு எந்த எந்த இடங்களில் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன ? பாளையங்கோட்டையில் ஒன்று கட்டி முடியும் தறுவாயில் இருக்கிறதே, அதன் திறப்பு விழாவுக்கு அமைச்சர் அவர்கள் வருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திறப்பு விழாவுக்கு அழைப்பு அனுப்பினால் வருவதுபற்றி யோசிக்கலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : விருதுநகரில் கட்டப்பட இருக்கிற பணிமனை எப்போது துவங்கும்? எப்போது முடிக்கப் படும் ? எத்தனை பேருந்துகள் பழுது பார்க்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 75 ஏக்கரா நிலம் அக்வயர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இருந்து அறிக்கை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அது வந்த பிறகுதான் முடிவு எடுக்கப்படும்.

மதுரையில் போக்குவரத்துத்துறை பணியாளர் வேலை நிறுத்தம்.

* 527 வினா.—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் போக்குவரத்துத்துறைப் பணியாளர்கள் 1969 ஜூலை 17-ஆம் நாள் அளவில் வேலை நிறுத்தம் செய்தனரா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?